

தமிழ்நாடு–புதுச்சேரி பார் கவுன்சிலில் வழக்கறிஞராக திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழக பொருளாளர் பா.நரேஷ்குமார் பதிவு செய்ததைத் தொடர்ந்து, மாவட்ட கழகச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான ஆவடி சா.மு. நாசரை நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### தமிழ்நாட்டு மக்களுக்கு எப்படி பாதுகாப்பாக

# தி.மு.க. செயல்பட வேண்டும் என்பதுதான் கழகத் தலைவரின் சிந்தனையாக இருக்கும்!

## கோவையில் – கழக மாணவர் அணி செயலாளர் ஈரோடு ஜெ.வீரமணி பேட்டி!

கோவை, ஆக.15-

தமிழ்நாடு மக்களுக்கு எப்படி பாதுகாப்பாக தி.மு. கழகம் செயல்படும் என்பதுதான் கழகத் தலைவரின் சிந்தனையாக இருக்கும் என்று கழக மாணவர் அணி செயலாளர் ஈரோடு ஜெ.வீரமணி செய்தியாளர்களிடம் கூறினார்.

ஒத்தக்கால்மண்டபம் ஹிந்துஸ்தான் பொறியியல் கல்லூரியில் பயின்று வந்த அமுதன் என்கிற மாணவரை சுமார் 20 பேர் கொண்ட கும்பல் கொடூரமாக தாக்கியதில் உயிரிழந்துள்ளார். அதற்கு முறையான நீதி விசாரணை வேண்டியும், அவர்களது குடும்பத்திற்கு முறையான இழப்பீடு வழங்க கோரியும், தற்போது கோவையில் அதிகரித்து வரும் போதை கலாச்சாரத்தையும் முற்றிலும் ஒழித்திடக்கோரியும், கடந்த பத்து நாட்களில் போதை பொருள்களினால் கோவையில் நான்கு கொலை சம்பவங்கள் நடைபெற்றுள்ளது எனவே சட்ட ஒழுங்கை சரி செய்யக்கோரி த.வெ.க அரசை கண்டித்து ஒருங்கிணைந்த கோவை மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில் இன்று 1408 2026 வெள்ளிக்கிழமை காலை 10 மணி அளவில் ஒத்தக்கால்மண்டபத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் தலைமையில்

ஒத்தகால்மண்டபம் பேரூர் கழக செயலாளர் கார்த்திகேயன் வரவேற்புரையில் கோவை வடக்கு மாவட்ட கழக செயலாளர் தொண்டாமுத்தூர் ஆ.ரவி, கோவை மாநகர் மாவட்ட செயலாளர் துரை.செந்தமிழ் செல்வன், கழக மாணவர் அணி துணை செயலாளர் வி.ஜி.கோகுல், கோவை வடக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் அந்தோணி ராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கழக மாணவர் அணி செயலாளர் ஈரோடு ஜெ.வீரமணி, பொள்ளாச்சி பாராளுமன்ற உறுப்பினர் கே. ஈஸ்வரசாமி, வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் குட்டி (எ) ஆ.சுதாகர், கழக ஆதிதிராவிடர் நலக்குழு துணை செயலாளர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள்.

கழக மாணவர் அணி செயலாளர் ஈரோடு ஜெ.வீரமணி செய்தியாளர்களிடம் கூறியதாவது : திறனற்ற த.வெ.க. அரசின் இந்த 100 நாட்கள் சாதனையாக தொடர் கொலை ஏற்பட்டுக் கொண்டே வருகிறது. இதில் மிகவும் பாதிப்பது யார் அப்படின்னு பார்த்தீங்கன்னா மாணவர்கள் தான். ஏன்னா மாணவர்களுக்கான திட்டங்கள் ஆகட்டும், பேர் மாற்றிவிட்டு ஸ்டிக்கர் ஒட்டிட்டு இருக்காங்களே தவிர புதிதாக எந்த ஒரு அறிவிப்பும் அறிவிக்காத இந்த ஸ்டிக்கர் ஒட்டி த.வெ.க. முதல்வர் விஜய் அவர்களுக்கு தி.மு.க. மாணவர் அணி சார்பாக வன்மையான கண்டனத்தை தெரிவித்துக் கொள்கின்றோம். சின்ன, சின்ன பசங்க, கல்லூரியில் தங்களுடைய கனவை சுமந்து கொண்டு வருகின்ற இந்த மாணவர்களின் வாழ்க்கையை சிறக்கின்ற, உயிரை பறிக்கின்ற த.வெ.க. அரசு இனியும் எதற்கு இந்த தமிழ்நாட்டில் ஆட்சி புரிய வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழக சார்பாக கேட்டுக்கொள்கின்றோம்.

கழகத் தலைவர் அவர்கள் வாயிலாக இந்த ஆர்ப்பாட்டம் அறிவித்தவுடன், காவல்துறை அப்பதான் துரிதமாக தூங்கிட்டு இருந்தவங்க எல்லாம் எந்திரிச்சு வேலை செய்ய ஆரம்பிச்சு ஒரு மூணு நாளா பார்த்தீங்க அப்படின்னா வெறும் அஞ்சு பேர் தான் வந்து கைது செய்யப்பட்டிருந்தாங்க. ஆனா நேற்றில் இருந்து இன்று காலைக்குள்ள அவசர அவசரமாக அந்த அந்த அமுதன் கூட இருந்த அந்த தம்பிகிட்ட விசாரணை நடத்தி இன்னைக்கு காலைக்குள்ள ஒன்பது பேரை கைது செய்திருக்காங்க. இன்னும் வந்து அஞ்சு பேரை நாங்க துரிதமாக தேடப்பட்டு வருகின்றவர்கள் அப்படின்னு ஆறு பிரிவுகள்ல அவங்க மேல வழக்கு பதிவு செய்திருக்காங்க. இது தி.மு.க. தான் எதிர்க்கட்சியா இல்ல ஆளும் கட்சியா அப்படின்னு ஒரு ஐயத்தை கிரியேட் பண்ணக்கூடிய அளவுக்கு திராவிட முன்னேற்றக் கழகம் தான் இந்த தமிழ்நாட்டை ஆட்சி புரிந்து கொண்டிருக்கின்றது.

கழகத் தலைவர் ஐயா முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் இருக்கும் வரை எந்த ஒரு ஆட்சியாக இருந்தாலும் சரி, அது வந்து மக்களுக்கான உரிமையை, மக்களுக்கான பாதுகாப்பை திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்கள் தான் உறுதிப்படுத்திக் கொண்டிருக்கின்றார் என்பது இந்த நேரத்தில் இதன் வாயிலாக தெரிவித்துக் கொள்கின்றோம்.

இளம் தலைவர் அவர்கள் தொடர்ந்து அமுதன் கொலை வழக்கை பற்றி பேசுறாரு.

சட்டமன்றத்தில் பேசும் பொழுது என்ன சொல்றாங்க, அப்படின்னா அது திங்கட்கிழமை பேசிக்கலாம். திங்கட்கிழமை வரைக்கும் நீங்க தூங்கி எந்திரிச்சு வருவீங்க, எங்களுக்கு வந்து ஹனிமூன் பீரியட் கொடுங்க. நாங்க அதுக்கப்புறம் நாங்க எப்படி ஓர்க் பண்றோம்னு பாருங்க, அப்படிங்கிற வரைக்கும் இங்க மக்கள் செத்துக்கிட்டு இருப்பாங்க. நாங்க எல்லாம் வேடிக்கை பார்த்துக்கிட்டு இருப்போம்னு நீங்க நினைக்கிறீங்களா?

கழகத் தலைவர் ஒருபோதும் இந்த மாதிரி மக்களை நடுத்தெருவுல இன்னலுக்கு விட்டுட்டு அவர் வந்து வீட்டில் படுத்து தூங்குவாரே இந்த த.வெ.க. முதல்வர் மாதிரி நினைச்சிடாதீங்க. நேற்று இரவு வரைக்கும் இந்த தமிழ்நாடு மக்களுக்கு நம்ம எப்படி பாதுகாப்பாக இந்த திராவிட முன்னேற்றக் கழகம் செயல்படும் அப்படிங்கிறதை தான் தொடர்ந்து அவருடைய சிந்தனையாக இருந்து கொண்டு வருகின்றது. இப்போ பார்த்தீங்கன்னா இந்த ஆர்ப்பாட்டம் நடக்கும் பொழுதே திருவள்ளூர் மாவட்டத்தைச் சார்ந்த 18 வயது மாணவர் இப்போ மறுபடியும் படுகொலை செய்யப்பட்டிருக்காங்க. இதன் வாயிலாக நாங்க த.வெ.க. அரசுக்கு ஒரு கேள்வி கேட்டுக்கிறோம்.

நீங்க என்னதான் பண்ணிட்டு இருக்கீங்க? உங்களுடைய கட்டுப்பாட்டில் விஜய் அவர்களுடைய கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய காவல்துறையை நீங்க என்ன ஏவல் துறையாக தி.மு.க. மீது சட்டமும், கைதும் பாய்கின்றது தவிர தொடர்ந்து மக்களுக்கு பாதுகாப்பு அப்படிங்கிறது கேள்விக்குறி ஆகிட்டு இருக்கு.

**ஆர்ப்பாட்டத்துல என்ன வலியுறுத்த போறீங்க?**

நாங்க ஆர்ப்பாட்டம்னு அறிவிச்ச உடனேவே கைது நடவடிக்கை விசாரணை துரிதப்படுத்தியிருக்காங்க, அதுலேயே உங்களுக்கு தெரிஞ்சிருக்கும் தி.மு.க. களத்தில் இறங்குகிறார்கள் அப்படின்னா அவங்களுக்கு ஒரு பயம் இருக்கு இல்லையா? அந்த பயம் இருக்கும் வரை இந்த தமிழ்நாட்டை ஐயா முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தான் ஆளுகின்றார் அப்படிங்கிறது தான் இதன் பொருள்.

போதைப்பொருள் கட்டுப்படுத்தும் பணியில் தொடர்ச்சியாக ஈடுபட்டுட்டு இருக்கோம்னு கோவை மாவட்ட அமைச்சர் சொல்லியிருக்காரு அது பற்றி,

கட்டுப்படுத்தும் பணியில் நீங்க இருக்கீங்க அப்படின்னா அந்த கல்லூரி நிர்வாகத்துக்கு ஏன் நீங்க துணை போறீங்க? கல்லூரி நிர்வாகம் இது இரு கும்பல் கும்பல்களுக்கு இடையேயான ஒரு சண்டை அப்படின்னு சொல்றீங்களே, ஒரு வரை 20 பேர் வந்து தாக்குறது இரண்டு கும்பல்களா? ஒருவர் வந்து கும்பல்னு உங்களுக்கு மீனிங்கா? அதை காவல்துறையும் எடுத்துக்கிட்டு கல்லூரி நிர்வாகத்தின் கைப்பாவையாக இருக்காங்க. இது துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அந்த மாணவரின் குடும்பத்திற்கு, இவங்க கரூரில் போய் 41 பேர் இறந்ததுக்கு அரசு வேலை கொடுத்தாங்க இல்லையா, கல்லூரி மாணவர்கள் இறந்த குடும்பத்துக்கு இதன் வாயிலாக அரசு வேலை கொடுப்பாங்களா? எங்களுடைய கேள்வியாக இதை முன்வைக்கின்றோம். எங்களுடைய தி.மு.க. சார்பாக கள்ளக்குறிச்சி மாவட்டச் செயலாளர் அவர்கள் அந்த வீட்டுக்குச் சென்று அமுதன் அவர்கள் குடும்பத்தாருக்கு நிதி உதவி 2 லட்சம் கொடுத்திருக்காங்க. த.வெ.க. என்ன கொடுத்திருக்காங்க தேர்தலுக்கு முன்பாக அனிதா வீட்டுக்கு போவாங்க, தரையில் உட்காருவாங்க. இப்போ இந்த வருஷம் நாலு பிள்ளைகள் இறந்திருக்காங்க. அந்த பக்கம் திரும்பி கூட பார்க்காத ஓடுகாலி முதலமைச்சர் இதற்காக தன்னுடைய பொறுப்பை, இந்த முதலமைச்சர் பதவியிலிருந்து விலக வேண்டும் என்று இதன் வாயிலாக நாங்கள் குறிப்பிட்டு கொள்கிறோம் என்று கூறினார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கழக நெசவாளர் அணி செயலாளர் கே.எம்.நாகராஜ், முன்னாள் மாவட்ட செயலாளர் தென்றல் செல்வராஜ், கோவை மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், துணை மேயர் இரா.வெற்றிச்செல்வன், கழக மகளிர் அணி துணை செயலாளர் மாலதி, மாவட்ட அவைத் தலைவர் மயூரா சுப்பிரமணியன், மாவட்ட பொருளாளர் ஜெயபிரகாஷ், மாவட்ட துணை செயலாளர் கனிமொழி, மாநகர் மாவட்ட துணை செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், அசோக் பாபு, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஏர்போர்ட் ராஜேந்திரன், பீடம்பள்ளி சுரேஷ்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் நடராஜ், ரகு துரைராஜ், மஞ்சு சௌமியா, ஆச்சிப்பட்டி பாலு, குறிச்சி பிரபாகரன், ஒன்றிய செயலாளர்கள் மன்னவன், சிபி. கே.செந்தில்குமார், முத்துமாணிக்கம், நந்தகுமார், தொண்டாமுத்தூர் கணேசன், கே.கே.செந்தில்குமார், செட்டிக்காபாளையம் துரை, ராஜு, ரமேஷ், கிரி கதிர்வேல், டி.யுவராஜ், ஹிமாலயா யுவராஜ் நகர செயலாளர்கள் அமுதபாரதி, ராம்ஜி, பகுதி கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள் கார்த்திகேயன், காதர், செந்தில்குமார் பேரூர் கழக செயலாளர்கள் கண்ணம் பாளையம் விஸ்வநாதன், வே.கனகராஜ், வெள்ளலூர் ராஜு, ப.கனகராஜ், ஆனந்தகுமார், பேரூராட்சித் தலைவர்கள் ஆர். கதிர்வேல், பிரியதர்ஷினி, கவிதா, ரங்கசாமி, மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் ஜெயலலிதா, ஞானசேகரன், கள்ளபாளையம் பாலு, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மணிமாறன், புவனேஷ், சல்மான் நாசர் உள்பட மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், பகுதி கழக மாணவர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக, வார்டு கழக, கிளை கழக செயலாளர்கள், BLA2, BLC , BDA நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

இறுதியில் கோவை தெற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் சூலூர் ஆர்.பிரபு நன்றியுரையாற்றினார்.

### தமிழ்நாடு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றும்

# வடக்கு மண்டல தி.மு.க. வழக்கறிஞர் அணி கலந்துரையாடல் கூட்டம்!

## திருவள்ளூர் மத்திய மாவட்ட வழக்கறிஞர்கள் பங்கேற்க மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் வேண்டுகோள்!

திருவள்ளூர், ஆக.15:

திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:வடக்கு மண்டல தி.மு.க. வழக்கறிஞர் அணி கலந்துரையாடல் கூட்டம், நாளை (16.8.2026 ஞாயிற்றுக்கிழமை) காலை 10.30 மணியளவில் சென்னை அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் நடைபெறுகிறது.



கழக சட்டத்துறைச் செயலாளரும் மூத்த வழக்கறிஞருமான என்.ஆர். இளங்கோ தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில், கழக இளைஞர் அணி செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும் மூத்த வழக்கறிஞர்கள் ஆர்.சண்முகசுந்தரம், இரா.விடுதலை, பி.வில்சன் எம்.பி., ஆர்.கிரிராஜன் எம்.பி. உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

இதனையொட்டி, திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்குட்பட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி நிர்வாகிகள், அனைத்து நீதிமன்றங்களின் கழக வழக்கறிஞர்கள், மாவட்ட அரசு முன்னாள் வழக்கறிஞர்கள் மற்றும் கழக வழக்கறிஞர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டும் என மாவட்டக் கழகச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான ஆவடி சா.மு.நாசர் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும், கூட்டத்தில் பங்கேற்கும் அனைவரும் கருப்பு-வெள்ளை சீருடை அணிந்து வர வேண்டும் என்றும் அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### கோவையை அடுத்து சென்னையிலும்

# பிளஸ் 2 மாணவர் அடித்துக் கொலை!

**சென்னை,ஆக.15- சென்னை திருவொற்றியூரில் அரசு பள்ளி வளாகம் அருகே ஒட்டிய பிளஸ் 2 படிக்கும் மாணவர் தனுஷ் நேற்று அடித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.**

திருவொற்றியூர் அருகே உள்ள விம்கோ நகரில்,ஜெய்கோபால் கரோடியா அரசு மேல்நிலைப் பள்ளி மைதானத்திற்கு அருகே, விம்கோ நகரைச் சேர்ந்த 19 வயதான 12ஆம் வகுப்பு மாணவர் தனுஷ் கொலை செய்யப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்டார். அதே பள்ளியில் படித்த முன்னாள் மாணவர்களால் தனுஷ் அடித்துக் கொலை செய்யப்பட்டதாக கூறப்படுகிறது.

பள்ளியின் பின்புறத்தில் காயங்களுடன்கிடந்த மாணவன் தனுஷின் உடலை கைப்பற்றி, சம்பவம் குறித்து காவல்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர். பள்ளி அருகே பட்டப்பகலில் நடந்த இந்த கொலை சம்பவத்தால் மாணவர்கள், ஆசிரியர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

### ரூபாய் ஒரு லட்சம் கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டது?

# த.வெ.க. அரசின் பொய்ப் பிரச்சாரம்!

## அரசியல் தலைவர்கள் – சமூக ஆர்வலர்கள் – தொழிலதிபர்கள் ஆட்சேபம்!

சென்னை, ஆக.15-

முதலமைச்சர் விஜய் முன்னிலையில் ரூபாய் ஒரு லட்சம் கோடிக்கு முதலீடுகள் ஈர்க்கப்பட்டதாக தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

தவெக ஆட்சிக்கு வந்த பிறகு, சட்டம் ஒழுங்கு சீர்கேட்டால் தமிழ்நாடு முதலீடுகளை ஈர்ப்பதில் சரிவை கண்டு வருவது பலரது கருத்தாக உள்ளது. தமிழ்நாட்டில் தொழில் முதலீட்டுக்கான சாதகமான சூழல் இல்லை என்று தொழிலதிபர்கள் பலர் கருதுவதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், ரூபாய் ஒரு லட்சம் கோடி முதலீடுகளை முதலமைச்சர் விஜய் ஈர்த்துள்ளதாக தவெக அரசு தற்பெருமை தேடி வருகிறது. ஆனால், ஒரு லட்சம் கோடி முதலீடுகள் ஈர்ப்பு என்பதே ஒரு பொய்யான தகவல் என சமூக வலைதளங்களில் பொருளாதார நிபுணர்கள் பலர் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

உதாரணமாக, திரு செந்தூரில் பத்தாயிரம் கோடி ரூபாய் மதிப்பில் முதலீடு செய்ய ஒரு நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. அந்த தனியார் நிறுவனத்தின் மூலதன மதிப்பு ஒரு லட்சம் ரூபாய் மட்டுமே என்று கூறப்படுகிறது. ஒரு லட்சம் ரூபாய் மட்டுமே மூலதனம் கொண்ட நிறுவனம், பத்தாயிரம் கோடி ரூபாய்க்கு முதலீடு செய்யப்போகிறதா? என்று கேள்வி எழுந்துள்ளது.

ஈர்க்கப்பட்ட முதலீடுகள் தொடர்பாக தெளிவான புள்ளி விவரங்களை தவெக அரசு வெளியிடவில்லை. இதிலிருந்து ஒரு லட்சம் கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டதாக கூறுவதில் வலுவான சந்தேகங்கள் எழுவதாக அரசியல் தலைவர்களும், சமூக ஆர்வலர்களும் தெரிவித்துள்ளனர்.

# சென்னை மெரினா கடற்கரையில் நேபாள இளைஞர் அடித்துக் கொலை!

சென்னை, ஆக.15-

சென்னை கடற்கரை மெரினாவில் நேபாளத்தைச் சேர்ந்த ஸ்ரீராம் சகா(27) என்ற இளைஞர் படுகொலை செய்யப்பட்டுள்ளார். கொலை செய்யப்பட்டவர் விருகம்பாக்கத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் பணியாற்றி வந்ததாக போலீசார் தெரிவித்துள்ளனர்.

மெரினாவில் நேபாள இளைஞர் கொலை செய்யப்பட்டுள்ளது குறித்து போலீசார் தனிப்படை அமைத்து விசாரித்து வருகின்றனர். சென்னை மெரினா கடற்கரையில் அண்ணா சதுக்கம் பின்புறம் உள்ள கல்லுக் குட்டை பகுதியில், அடையாளம் தெரியாத இளைஞர் ஒருவர் ரத்தக் காயங்களுடன் இறந்து கிடப்பதாக போலீஸாருக்கு பொதுமக்கள் தகவல் தெரிவித்தனர்.

இதையடுத்து அண்ணா சதுக்கம் போலீஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர். அங்கு ரத்தக் காயங்களுடன் சடலமாக கிடந்த இளைஞரின் உடலை மீட்டு, பிரேதப் பரிசோதனைக்காக அருகில் உள்ள அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும், அவர் இறந்து கிடந்த இடத்தில் மது பாட்டில்கள், செல்போன் மற்றும் கைப்பை ஆகியவற்றை போலீஸார் கைப்பற்றி விசாரணை நடத்தினர். முதற்கட்ட விசாரணையில், இறந்து கிடந்தவர் நேபாளத்தைச் சேர்ந்த ஸ்ரீராம் சகா என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் விருகம்பாக்கம் பகுதியில் தங்கி, அங்குள்ள ஓட்டல் ஒன்றில் வேலை செய்து வந்ததும் தெரியவந்தது.

அவரின் உடலில் ரத்தக்காயங்கள் இருந்ததால், அவர் அடித்துக் கொலை செய்யப்பட்டிருப்பதாக போலீசார் சந்தேகிக்கின்றனர். நண்பர்களுடன் மது அருந்திய போது ஏற்பட்ட தகராறில் ஸ்ரீராம் சகா தாக்கப்பட்டாரா அல்லது அந்த பகுதியில் சுற்றித் திரிந்த மர்ம நபர்கள் அவரை தாக்கி கொலை செய்தார்களா? என்று பல்வேறு கோணங்களில் போலீசார் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

### கிருஷ்ணகிரி மாவட்டம் –

# ஓசூர் அருகே 8 வயது சிறுமியை கடத்திச்சென்று பாலியல் தொல்லை!

## த.வெ.க. ஆட்சியில் குழந்தைகள், பெண்களுக்குப் பாதுகாப்பற்ற சூழல்!

ஒசூர், ஆக.15-

கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் அருகே 8 வயது சிறுமியை கடத்திச்சென்று பாலியல் தொல்லை கொடுக்கப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தேன்கனிக்கோட்டை தாலுகாவுக்கு உட்பட்ட மலைக் கிராமத்தில் அரசுப் பள்ளியில், 4ஆம் வகுப்பு படித்து வரும் சிறுமி பள்ளி முடிந்து சக மாணவிகளோடு வீடு திரும்பியுள்ளார். அப்போது, அந்த பகுதியில் மாணவியை பின் தொடர்ந்து வந்த மர்ம நபர் ஒருவர், சிறுமியை தூக்கிச்சென்று பாலியல் சீண்டலில் ஈடுபட்டுள்ளார். பாதிக்கப்பட்ட சிறுமி வீட்டுக்கு சென்று பெற்றோரிடம் கூறியுள்ளார். உடனடியாக, வீட்டில் இருந்தவர்கள் அருகில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சிறுமியை சிகிச்சைக்காக அழைத்து சென்றுள்ளனர். தொடர்ந்து, சிறுமி மேல் சிகிச்சைக்காக கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இந்த சம்பவம் மக்களிடையே அதிர்ச்சியையும், அச்சத்தையும் ஏற்படுத்தி இருக்கும் நிலையில் தேன்கனிக்கோட்டை அனைத்து மகளிர் காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.




தாம்பரம் மாநகராட்சி, வார்டு 32 ற்கு உட்பட்ட கடப்பேரி, அரசு ஆதிதிராவிடர் நடுநிலைப் பள்ளியில் பல்வேறு மேம்பாட்டு பணிகளை மாணவர்கள் பயன்பாட்டிற்காக தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி கமலகண்ணன் துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் துணை மேயர் கோ.காமராஜ், மேப்ஸ் சிறப்பு பொருளாதார மண்டல வளர்ச்சி ஆணையர் அலெக்ஸ் பால் மேனன், தாம்பரம் மாநகராட்சி துணை ஆணையர், மாநகராட்சி மற்றும் மெப்ஸ் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.